DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.56/2022

Prosecution witness for P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முருகேசபாண்டி | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2024.**

Accused NBW pending (As per order in Crl.M.P.No. 4018/2022 evidence recorded in the absence of the Accused)

**முதல் விசாரணை**

நான் காந்திபுரி தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தான்குளம் பஞ்சாயத்து யூனியன் பள்ளக்குறிச்சி பஞ்சாயத்தில் தண்ணீர் திறந்துவிடும் வேலை செய்து வருகிறேன். 2016 ஆம் வருடம் மணிநகரில் கோவில் காவலாளி முத்து என்பவர் இறந்துபோன வழக்கு தொடர்பாக 05.07.2016 ஆம் தேதி அன்று பிச்சிகுடியிருப்பு ஊரில் உள்ளவர்கள் அந்த ஊரில் உள்ள சுடலை கோவிலில் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக சொன்னார்கள். ஒரு பாட்டி அம்மாவும் அடிபட்டு கிடந்தார்கள். அப்போது ஊரில் உள்ள நிறைய பேர் பார்த்துகொண்டு வந்தார்கள். நானும் போய் பார்த்தேன். அந்த கோவிலில் காவலாளியாக உள்ள தாத்தா வாயில் துணியை எல்லாம் வைத்து கட்டி, கையில் கயிறு கட்டி அம்மனமாக இருந்தார். பாட்டி வந்து அங்கு இருந்தார்கள். பாட்டி அடிபட்டு இரத்தக்காயத்துடன் இருந்தார்கள். அப்போது போலீஸ்காரர்கள் வந்தார்கள், ஆம்புலன்ஸ் வந்தது. கோவிலில் உண்டியல் உடைக்கப்பட்டு இருந்தது. நான் மோட்டார் போட வந்தேன். ஒரு பல்சர் வண்டி 2,3 பேர்கள் இருந்தனர். அது வேகமாக போனது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள், அப்போது அதிகாலை 3.00 மணி முதல் 4.00 மணி அளவில் கருப்பு கலர் பல்சர் பைக் சென்றதாக கூறினேன்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi(FAC).

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.56/2022

Prosecution witness for P.W. 6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வம் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2024.**

Accused NBW pending (As per order in Crl.M.P.No. 4018/2022 evidence recorded in the absence of the Accused)

**முதல் விசாரணை**

நான் உடன்குடி எம்ஜிஆர் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் 2016 ஆம் வருடம் கோவில் காவலாளியாக இருந்த இறந்துபோன முத்து என்பவர் எனக்கு அப்பா. அவர் பிச்சிகுடியிருப்பு சுடலை கோவிலில் காவலாளி ஆக இருந்து வந்தார். என் அப்பா கோவிலிலேயே இருப்பார். சாப்பாடு என் அண்ணன், அம்மா கொண்டு போய் கொடுத்து வருவார்கள். என் அப்பாவுடன் மூக்கம்மாள் பாட்டி வேலை பார்த்து வந்தார். தற்போது மூக்கம்மாள் பாட்டி இறந்துபோய்விட்டார். அவர் உடன்குடியில்தான் இறந்துபோனார்கள். எந்த வருடம் என்று தெரியவில்லை. 05.07.2016 அன்று என் அப்பா இறந்துபோனார். அன்று என் அண்ணன் ராஜசேகரும், அத்தை பையன் பாலன் என்பவரும் சாப்பாடு கொண்டு போனார்கள். என் அப்பா படுத்திருந்த இடத்தை பார்த்தபோது கலைந்துபோய் இருந்தது. பின்னால் சமையல் செய்கிற இடத்தில் போய் பார்த்தபோது, அங்கு துண்டால் என் அப்பாவின் கைகள் கட்டப்பட்டும், வாயில் துணி கட்டப்பட்டும், கைகள் நைலான் கயிறாலும் கட்டப்பட்டிருந்தது. கால்களும் கட்டப்பட்டிருந்தது. என் அப்பா உடம்பில் முகத்தில் காயங்களும், வாயிலும், மூக்கிலும் இரத்தம் வந்து கிடந்தார். துணிஇல்லாமல் ஆணுறுப்பு சிதைந்த நிலையில் விந்தணு வெளியேறும் நிலையில் இறந்து கிடந்தார். மூக்கம்மாள் பாட்டியும் கைகால்கள் கட்டப்பட்டு முகத்தில் காயத்தோடு உயிருக்கு போராடிய நிலையில் இருந்தார்கள். அண்ணணும், பாலனும் பார்த்து பாட்டிக்கு தண்ணீர் கொடுத்துள்ளனர். கோவிலின் கேட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, உண்டியலும் உடைக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆம்புலன்சில் பாட்டியையும், அப்பாவையும் ஏற்றி சாத்தான்குளம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் சாத்தான்குளம் அரசுமருத்துவமனை சென்று பிரேதத்தை அடையாளம்

காண்பித்தேன். இது சம்மந்தமாக என் அண்ணன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi(FAC).